## இலங்கைப் பாராளுமன்றம்
## வெற்றிடம்

---

### ஊடக அலுவலர் (தமிழ்)

---

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் உள்ள ஊடக அலுவலர் பதவிக்கு (தமிழ்) சிறந்த தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் **"பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**" எனும் முகவரிக்கு **2025 ஒக்டோபர் 31** அன்று அல்லது அதற்கு முன்னர் வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**ஊடக அலுவலர் பதவி (தமிழ்) (வெற்றிடமாயுள்ள பதவிகளின் மொத்த எண்ணிக்கை 01)**

1. **தொழில் தொடர்பான விபரம்-** ஊடகப் பிரிவிற்குச் சாட்டப்பட்டுள்ள முகாமைத்துவத்திற்கான உதவிப் பணிகளை நிறைவேற்றுதல்.

2. **சம்பள அளவுத்திட்டம்-** 04/2025 ஆம் இலக்க 2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கான மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 58,660 -9 x 1190 / 3 x 1360 -73,450 (அனைத்துக் கொடுப்பனவுகளும் அடங்கலாக, இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த மாதாந்த ஆரம்ப ஊதியம் அண்ணளவாக ரூ. 100,000/-) ஆகும்.

3. **வயதெல்லை-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

4. **கல்வித் தகைமைகளும் அனுபவமும்-**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் பல்லூடகக் கலை/கட்புலத் தொடர்பாடல் வடிவமைப்பில் கட்புலக் கலை (சிறப்பு) இளமாணி பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கலைமாணிப் பட்டத்தை (தொடர்பாடல்/வெகுசனத் தொடர்பாடல்/ வெகுசன ஊடகம்/ பொதுமக்கள் உறவுகள் மற்றும் ஊடக முகாமைத்துவம்/ தொடர்பாடல் மற்றும் ஆக்கக் கலைகள்/சமூகவியல் /அரசியல் விஞ்ஞானம் ஒரு பாடமாகக் கொண்ட) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் ஊடகவியல் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

ஊடகவியலில் அல்லது வெகுசனத் தொடர்பாடலில் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருக்கவும் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை-** எழுத்துமூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் நியமிக்கும் குழாமினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பின்வரும் தெரிவடிப்படைகளைக் கருத்திற்கொண்டு, புள்ளிகள் வழங்கப்படும். ஆகக்கூடிய புள்ளிகள் 100.

| **தொடர் இலக்கம்** | **தெரிவடிப்படை** |
|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் |
| 2 | மொழி மற்றும் தொடர்பாடல் திறன்கள் |
| 3 | கணினி அறிவு |
| 4 | உரிய துறையில் அறிவு மற்றும் வேலை அனுபவம் |
| 5 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டப்படும் ஆளுமை மற்றும் செயலாற்றுகை |

6. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**

(i.) இந்தப் பதவி நிரந்தரமானதாகும். இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைய நிர்ணயிக்கப்படும். முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் ஒரு நிரந்தரப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவருக்கு ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

(ii.) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சாத்திகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii.) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சாத்திகள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் / தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

(iv.) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சாத்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v.) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சாத்திகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் (மூலப்பிரதிகள் அல்ல). மூலப் பிரதிகள் கேட்டுக்கொள்ளப்படும் போது மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்

(இ) தொழிற்றகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்

(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்

8. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

9. ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்குச் செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

10. வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் தவறானது எனக் கண்டறியப்பட்டால், அவர் தகைமையற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

11. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற அல்லது உரிய கல்வித் தகைமைகளினதும், அனுபவம் பற்றிய சான்றிதழ்களினதும் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பிவைக்கப்படாத (அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள்) நிராகரிக்கப்படும். திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பிவைக்கப்படுகின்ற போதிலும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற மற்றும் மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதில் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2025 ஒக்டோபர்